# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப. (ஓ).

************

முறையீட்டு மனு எண்: 0108/2017/ந

ஆணை எண்: 121/2017

நாள்: 20/05/2017

திரு. பா. தவமணி,
3/146, சிவா விஷ்ணு நகர்,
முடிச்சூர்,
தாம்பரம், சென்னை – 600 048. - முறையீட்டு மனுதாரர்

திரு. எஸ். மதிவாணன்,
நகராட்சி ஆணையாளர்,
தாம்பரம் நகராட்சி. - எதிர் மனுதாரர்

## ஆணை

முறையீட்டு மனுதாரது 05.05.2017 நாளிட்ட முறையீட்டு மனு 08.05.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று முறையீட்டு மனு எண்.0108/17 ஆக பதிவு செய்யப்பட்டது.

மேற்படி முறையீட்டு மனுவில் தாம்பரம் நகராட்சி வாக்காளர் பட்டியலில் நகராட்சிக்கு சம்பந்தமில்லாத பகுதி வாக்காளர்களை சேர்த்துள்ளதாக தெரிவித்து தாம்பரம் நகராட்சி ஆணையரை எதிர்மனுதாரராக முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இம்முறையீட்டு மனுவுடன் இணைத்து வரப்பெற்ற "தமிழ்நாடு பொது உரிமை பாதுகாப்பு சங்கம்" என்ற அமைப்பின் சார்பில் அளிக்கப்பட்டுள்ள 08.05.2017 நாளிட்ட கடிதத்தில் தாம்பரம் நகராட்சி ஆணையர், மாநில தேர்தல் ஆணைய பிரிவு அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியரக தேர்தல் பிரிவு தலைமை பிரிவு அலுவலர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

இதில் தாம்பரம் நகராட்சி ஆணையர் தவிர மேற்கூறிய பிற அலுவலர்கள் 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 2 (I)ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள" பொது பணியாளர்" வரையறைக்குள் வருக்கப்படவில்லை. மேலும், ஏற்கெனவே இம்முறைமன்ற நடுவ ஆணை எண்.0200/2016 நாள்.07.12.2016ல் குறிப்பிடப்பட்டவாறு இந்திய அரசியலமைப்புச் சட்ட சரத்துக்கள் 243k மற்றும் 243ZA மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 மற்றும் விதிகளின்படி இப்பொருள் மாநில தேர்தல் ஆணைய கண்காணிப்பு, கட்டுப்பாடு மற்றும் வரம்பிற்குட்பட்டதாகும். எனவே, இம்முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு உகந்ததல்ல என தெரிவித்து தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது. ஆனால், இந்த மனுவினை மாநில தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கவும் முடிவு செய்யப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மே திங்கள் 20-ஆம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒப்பம்/-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்,

பெறுநர்

1. திரு. பா. தவமணி,
   3/146, சிவா விஷ்ணு நகர்,
   முடிச்சூர், தாம்பரம்,
   சென்னை – 600 048.

2. நகராட்சி ஆணையாளர்,
   தாம்பரம் நகராட்சி,
   தாம்பரம்.

நகல்

செயலாளர்,
தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்,
208/2, ஜவஹர்லால் நேரு சாலை,
அரும்பாக்கம், சென்னை – 600 106.